1994 ஏப்ரல் 27]

420—

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் மிகவும் பிற்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்டுதல்

***22242—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பார்த்திபனூரில் மிகவும் பிற்பட்டோர் நல மாணவியர் விடுதி கட்ட அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா?

(ஆ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு .டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஏதும் இல்லாததால் விடுதிக்குக் கட்டிடம் கட்டுவது என்பது எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பிற்பட்ட பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களை சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் பாதுகாப்பதற்காக பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். நான் பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக இருப்பதன் காரணமாக, இங்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக, மாணவியர் விடுதி அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்து, மாவட்ட பிற்பட்டோர் நலத் துறை மூலமாக அனுப்பப்பட்டுள்ளதா என்று கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுதி இல்லாததால் கட்டிடம் கட்ட சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்துத் தர உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதியிலே அந்த விடுதிக்குக் கட்டிடம் வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்து அதோடு புதிதாக ஒரு விடுதி வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். கட்டிடத்தைப் பொறுத்தமட்டில் அங்கு நம்முடைய இதய தெய்வம்

[1994 ஏப்ரல் 27

புரட்சித் தலைவி அவர்கள் எதிர்காலத்திலே மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு இன்றைக்கு உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கு ஏற்கனவே ஒரு மாணவியர் விடுதி ஒன்று கொடுக்கப்பட்டு விட்டது. அந்த விடுதிக்கு வேண்டுமென்றால் அவர்கள் சொந்தமாக இடம் கொடுத்தால், கிட்டத்தட்ட 1/4 ஏக்கரா அளவுக்கு இடம் கொடுத்தால் விடுதிக்குக் கட்டிடம் கட்டுவது பற்றி யோசிக்கப்படும். அதோடு புதிய விடுதி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பல தொகுதிகளுக்கு புதிய மாணவியர் விடுதிகள் கொடுக்க வேண்டும் என்ற பட்சத்திலே இந்தக் கோரிக்கையை தற்போது ஏற்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஒவ்வொரு துறையிலும் பெண்களுக்கு என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1500 மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். இங்கு பெண்கள் மட்டும் 670 பேர் படிக்கிறார்கள். பெண்களுக்கு என்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளி வேண்டும் என நேற்றையதினம் அந்த ஊரிலுள்ள மக்கள் எல்லாம் ஒரு லட்ச ரூபாய் கட்டுவதற்காக வந்தார்கள். ஆகவே, அவ்வாறு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்துகின்ற அந்த ஊரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மக்களுடைய முன்னேற்றம் கருதி அங்கே இருக்கின்ற மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்கு பிற்பட்டோர் நலத் துறையின் மூலமாவது அல்லது மிகவும் பிற்பட்டோர் நலத் துறையின் மூலமாவது பார்த்திபனூரில் மாணவியர் விடுதி ஆரம்பிக்க அடுத்த ஆண்டாவது நடவடிக்கை எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு படிக்கின்ற மாணவியர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டு, அதாவது 1994-95 ஆம் ஆண்டில் அங்கு மாணவியர் விடுதி ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.